REGD No. M. 4643

திராவிடநாடு

இலங்கை 15 சதம் விலை அணா 2

மலர் 9 | 8—4—51 | இதழ் 42

★ அன்பழைப்பு ★

[C. N. A.]

திருச்சி, சர்தார் பட்டேல் பந்தலில் 28—3—51 அன்று நடைபெற்ற உழவர் 'மாநாட்டில், பேசியது.

உழவர் பிரச்னை பற்றிப் பேச, பல கட்சிகளைச்சேர்ந்த நாம், இங்கே கூடியிருக்கிறோம். ஒவ்வொரு இலட்சியத்துடன் பாடுபடும் நாம், ஒரு பொது விவகாரத்தில், ஒன்றுபடுத்தப்பட்டுள்ளோம். இந்த முயற்சி சிறந்த முயற்சி. இதுபோன்ற கூட்டு முயற்சி, அரசியல் கட்சிகளிடையே, அடிக்கடி ஏற்படவேண்டும் என்று ஆசை கொண்டவன் நான். தங்களது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதும், ஒரு கட்சியின் நோக்கங்களை, வேறொரு கட்சியினர் புரிந்து கொள்ள வாய்ப்புத் தருவது மாத்திரமல்ல; தங்களுடைய போக்கில் தவறுதல் இருக்கிறது என்று உணர்த்தப்பட்டால அந்த ஓரிரு பகுதிகளைத் திருத்தியும், மாற்றியும் அமைத்துக் கொள்ளவும், இந்தக் கூட்டு முயற்சி உதவும்.

உழவர் வாழ்வு, ஒரு கட்சிக்குரிய விஷயமல்ல. பொதுபபிரச்னை. நாட்டுக்குரிய ஒரு பிரச்னை; இது போன்ற விஷயங்களில், எல்லாக் கட்சியினருமாகச் சேர்ந்து கூட்டு முயற்சியில் ஈடுபடுவது நல்ல காரியம் மட்டுமல்ல; நாட்டுவாழ்வில், உண்மையாகவே அக்கறை கொண்டோர் இவர்கள் என்ற உண்மையையும் எடுத்துக் காட்டுகிறது.

காலையிலே ஓமாந்தூரார் அவர்கள் பேசுகையில் வற்புறுத்திக் கூறிய இரண்டு விஷயங்கள் ஒழுக்கம், கண்ணியம் ஆகியவைகளாகும். இவையிரண்டும் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவை என்று கூறமுடியாது' ஒழுக்கம், கண்ணியம் இரண்டுமே, எந்தக் கட்சிக்கும் அடிப்பீடமாக அமைய வேண்டும். கண்ணியமான போக்கு இருந்தால், உட்கருத்துக்களைப்பற்றி தப்பபிட்பிராயம் ஏற்படுத்தாது. பிறரைக் குறித்து, வேண்டுமென்றே குறை கூறவோ, வெறுத்துப் பேசவோ, இடங்கொடுக்காது.

இங்கே நான், முன்னாள் முதலமைச்சர், பழைய கோட்டை பட்டக்காரர் ஆகிய, பல கோணங்களைச் சேர்ந்தோர் இருக்கிறோம். இந்தக் கூட்டுமேடையைக் குறித்து அரசியல் ஆருடம் கணிக்காமலில்லை-டலர். தங்கள் தங்கள் அறிவுக்கெட்டிய வரை யூகம், அதன் சக்திக்கேற்ற அளவு ஆருடம், கணிக்கத் துவங்கி விட்டனர்.

'ஏ! அப்பா அண்ணாதுரைபோகும் மாநாட்டிலா ஓமாந்தூரார் கலந்து கொள்கிறார்' இப்படி ஒரு பேச்சு. 'ஓமாந்தூரார் அவர்களே! அரசியல் வேடதாரிகளோடு போய்ச் சேராதீர்' இப்படி, துண்டு நோட்டீஸ் மூலம், ஓமந்தூராருக்கு ஒரு எச்சரிக்கை. திருச்சி, தீரர்கள்வாழுமிடம் என்றே நம்பிவந்தேன். ஆனால் இப்போது, துடைநடுங்கிகள் சிலரும் இருக்கிறார்கள் என்பதையே, அத்துண்டு நோட்டீசுகள் சொல்லுகின்றன. ஓமாந்தூராருக்கு எச்சரிக்கை விடுத்து அச்சடிக்கப்பட்டுள்ள அத்துண்டு நோடீசின் கீழே, 'இங்ஙனம் ஊர்ப் பொதுமக்கள்' என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால், அதன் பக்கத்திலேயோ எங்கு அச்சடிக்கப் பட்டதோ அந்த பிரஸின் பெயரும் போடப்பட்டிருக்கிறது. பிரஸ்காரர் ஊரார் சொலலினரா, என்று கேட்டிருக்கமாட்டார், 'எத்தனை நோட்டீஸ்? எவ்வளவு பணம்? தருகிறாய் என்றுதான், நோட்டீசு அடிக்கவந்தவரைக் கேட்டிருப்பார்! அவருக்கு நோட்டீசு அடிக்கவந்தது பொதுமக்கள் தானா, அவர்கள்தான் கூடாதென்கின்றனரா, என்ற விபரம் அவசியமில்லை: இந்த உண்மை நமக்குத் தெரியாது என்று நினைத்தோ, அல்லது தனது பெயரைக் கீழே போட, கோழைத்தனம் குறுக்கிட்டதாலோ 'பொதுமக்கள்' என்று போடச் செய்திருக்கின்றனர். இவ்வளவு, கோழைகளாக, தேசியம் இவர்களை ஆக்கிவிட்டதே என்று வெட்கப்படுகிறேன்!

காலையிலே கண்ணியத்தைப்பற்றி

எங்கள் பணி அரசியல் லாபமல்ல

குறிப்பிட்டார் முன்னாள் முதலமைச்சர். அரசியல் கட்சிகளிலே அது, அவசியம் தேவை என்று வலியுறுத்தினார். ஒத்துக்கொள்ளவேண்டிய உண்மை. ஆனால், அந்தக் கண்ணியம், எங்கே குறைந்துவருகிறது, எக்கட்சியில் மறைந்து வருகிறது என்பதை அவருடைய சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

மாநாடு நடைபெறும் பந்தல், சர்தார்பட்டேல் பந்தல். சர்தார் பட்டேல் பந்தலுக்கு அண்ணாதுரை வரும்போது, அண்ணாதுரை வருகிற இடத்துக்கு ஓமந்தூரார் வந்தால் என்ன? வரக்கூடாதா, அல்லது நான் வரலாம்வேறு தலைவர் பெயர்கொண்ட பந்தலுக்கு; அவருக்குமட்டும் அந்த ஆசை கூடாது என்பதா.

இதை உற்றுநோக்கினால், எங்களுடைய அரசியல் கண்ணியம் விளங்கும்.

இன்னொரு கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளும் இடத்தில் நான் போகத்தான் வேண்டுமென்பதென்ன? போகாமலிருப்பதால் எங்களது கொள்கைகள், என்ன குறைந்தா போய்விடும்? இருந்தும், பொதுவிவகாரங்களில், கூட்டு முயற்சி தேவை என்ற உற்சாகத்தோடு நாங்கள் ஏன் கலந்துகொள்ளுகிறோம்.

நாங்கள் கண்ணியம் உடையவர்கள், சகிப்புத்தன்மை எங்களுக்கு அதிகம், விட்டுக்கொடுப்பது, வேதனைகள் நீங்க எப்படியாவது பாடுபடுவது—இவை, எங்களுடைய பாதை. இந்த நோக்கத்தை எல்லோரும் அனுஷ்டித்தால், நாட்டில் கட்சிப் பூசல்களும், வீண்சச்சரவுகளும்எப்படி எழும்பும்? ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இந்த அளவு அரசியல் கண்ணியம் மாற்றுக் கட்சியினரிடையிலே மலரவில்லை; மறைந்துவிட்டது.

எனினும் மதிப்பிடத்தக்க விலக்காக, குறிப்பிடத்தக்க அளவில், இருப்பவர் நமது ஓமந்தூரார் அவர்கள்.

நான், அவர் ஆட்சி நடத்திய போது ஒருவாரம் அவருடைய கைதியாகக் காலங் கழித்திருக்கிறேன். அவரோ, முன்னாள் முதலமைச்சர்; நானோ கைதி!

கைதியும், முன்னாள் முதலமைச்சரும் இங்கே கூடியிருப்பது விவசாயிகளின் வேதனையைப் போக்க ஆளுக்கொரு கரங்களைப்பிடித்து, இழுக்கத்தான். அது தவிர்த்து, வேறு எதற்காகவுமல்ல. இருந்தும், இங்குள்ள சில தேசியத்தோழர்கள் துண்டு நோட்டீஸ் அடித்திருக்கிறார்கள்.

மிக மிகப்பலம் வாய்ந்தது தேசிய கவசம் என நினைத்திருந்தேன். ஆனால், இப்போது தெரியவருகிறது அது எவ்வளவு சீக்கிரம் கல கலத்துப்போகிறது, பட படத்துக் கரைகிறது என்பது!

இந்த ஒரு மாநாட்டில் கலந்துகொள்வதால் ஓமந்தூரார், தனது பழைய கவசத்தைக் களைந்து விட்டு புதுக்கவசம் போட்டுக்கொண்டு விடுவாரோ, என்று கலங்கிப் போயிருக்கின்றனர், அவர்கள். பரிதாபம், அந்த தோழர்கள் ஓமந்தூராரையும் புரிந்துகொள்ளவில்லை, தேசியத்தையும் புரிந்து கொள்ளவில்லையே என அனுதாபப்படுகிறேன்.

இந்த மாநாட்டில், நான் பங்குகொள்வதால் ஓமந்தூரார் கட்சி மாறிவிடுவாரென்று கருதுமளவு பைத்யக்காரனல்ல, நான். திடீர்த் தோழர்களையோ, கூடு விட்டுக் கூடு பாய்பவர்களையோ, பார்த்திராதவனுமல்ல நான். பார்த்தவுடன் கட்சியிலிழுக்க வேண்டும் என்று கருதுமளவுக்கு எனது கட்சியும் இல்லை. அத்தகையோர் இல்லாமல் தான் எங்கள் இயக்கம் வளர்ந்து வந்திருக்கிறது என்பதை, மக்கள் அறிவர்.

எனது ஆசையெல்லாம் கருத்துக்கேற்றபடி காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான். எப்படியாவது நாட்டு நலிவு நீங்கவேண்டுமென்பதுதான்.

இன்று, இம்மாநாட்டைத் துவக்கிவைத்து அருமையான கருத்துரைகளைத் தந்த ஓமந்தூரார் அவர்கள் சர்க்காரும் சமூகமும் விவசாயிகளை எவ்வளவுதூரம் புறக்கணித்துவிட்டது என்பதை வேதனையோடு வெளியிட்டார். அதே நேரத்தில், எச்சரித்தார். 'உழவர்களே! உங்களை அரசியல் கட்சிகள் எளிதில்ஏமாற்றிவிடும். ஆகவே, எந்த அரசியல் கட்சிகளுக்கும் அடிமையாகி விடாதீர்கள்' என்பதாக.

உண்மை, விவசாயிகளின் வேதனை, அவர்களின் அதிருப்தி, மனக்குமுறல் ஆகியவைகளைச் சாதகமாக்கித் தேர்தல் சூதாட்டத்திலே வெற்றி பெற இந்நாட்டு அரசியல் கட்சிகள் முயற்சித்துக் கொண்டுதான் உள்ளன. ஆகவேதான் அவர் விடுத்தார் எச்சரிக்கை, உழவர்களுக்கும் அதே நேரத்தில் அரசியல் கட்சிகளுக்கும்.

நான், ஒரு அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவன். நான் சார்ந்திருக்கும் கட்சியின் சார்பிலே அவருக்கு உறுதி கூறுவேன், உழவர்களைப் பயன்படுத்தி அரசியல் லாப நோக்கம், கொள்ளமாட்டோம், என்பதை.

மற்ற அரசியல் கட்சிகள் உழவரைப் பயன்படுத்த விரும்புவது—தேர்தலிலே, லாபம் பெற. நல்லவேளையாக எங்களுக்கு அந்த ஆசையுமில்லை, அவசியமுமில்லை.

எங்களது நோக்கம் எல்லாம், பேதமற்ற வாழ்வு சமுதாயத்தில் ஏற்படவேண்டும், எங்கும் இன்பம் மலரவேண்டும், எல்லோரும் மனிதராக வாழவேண்டும் என்பதுதான்.

இந்த நிலை நிரந்தரமாக வேண்டும் என்பதற்காகவே, எமது பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது.

வியாபாரிகளின் வேதனையைத் தூண்டிவிட்டு, மாணவர்களிடையே மன எரிச்சலை அதிகமாக்கி, ஆசிரியர்களின் அல்லலைக் காட்டி, தொழிலாளர்களின் துயரத்தைப் பெரிதாக்கி, வோட்டுக் கணக்கெடுக்கும் அரசியல் கட்சிகளிலே நாங்கள் சேராதவர்கள்.

அரசியல் குட்டையிலே மீன்பிடிக்க வலை வீசுபவர்களல்ல நாங்கள்.

சந்தேகமிருந்தால் நன்றாகப் பாருங்கள் 'வலை எங்கள் கையிலிருக்கிறதா?' என்று.

அரசியல் கட்சிகளின் ஆசாபாசங்களுக்கு இரையாகி விடாதீர்கள், என்று உழவர் மக்களுக்கு ஏன், அவர், வலியுறுத்தினார்? காரணம்

நல்ல காரியம் துவக்க நல்லவரே, வாரீர்!

ஏழை விவசாயிகள் படிப்பற்றவர்கள். ஆகவே, அவர்கள் மனதை மயக்கிவிடலாம், அரசியல் கட்சிகள்—சிறிது முயன்றால். இந்தக் கருத்திலேதான், அவர் சொன்னார். ஆனால் ஒன்று, இந்நாட்டு விவசாய மக்களுக்கு கதிர் எது, பதர் எது என்று பகுத்தறியும் சக்தி அதிகம். ஆகவே வலையிலே வீழ்ந்து பலியாகி விடமாட்டார்கள், அவ்வளவு எளிதில்.

இன்று, பல கட்சித் தலைவர்கள் இங்கே கலந்துகொண்டாலும், ஒரு உண்மை மட்டும் வெளிப்பட்டு விட்டது அந்த உண்மையை எல்லோரும் எடுத்துக் காட்டினர். அதாவது, உழவரிடம் திருப்தி இல்லை!

இந்த உண்மையை எடுத்துச் சொல்லிய நேரத்தில், ஒவ்வொருவரும், ஒவ்வொரு மார்க்கம் காட்டினர்.

உழவர் நிலை என் [illegible] பார்க்கிற நேரத்தில் உழவரின் [illegible], நீர்ப்பாசன மில்லாது அவன் படும் கஷ்டம், உரமில்லாது தவிப்பது, ஆகியவைகளை மட்டும் [illegible] குறிப்பிட விரும்புவது இவைகள் திருத்தப்பட்டுவிட்டால், எல்லா இன்பமும் உண்டாகிவிடும் என்று நம்புபவனும் நான் அல்ல. ஏனெனில் உழவர்களால் உற்பத்தி செய்யப்படும் செல்வம், அவர்கள் உழைப்பினால் கிடைக்கும் பலன், நமது நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தைப் (Standard of life) உயர்த்தப் போதுமானதாக இல்லை. ஆகவே விவசாயிகள் விவசாயம் ஒன்றையே நம்பி வாழ முடியாது!

பொதுச் செல்வம் வளர, நாட்டு வருவாய் வளமாக, விவசாயிகள் வேறு தொழில்களைக் கற்றுக்கொள்ள வேண்டியது மிக, மிக அவசியம். இதை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் எத்தகைய தொழில்கள் உழவர்களுக்குத் தேவை என்று குறிப்பிடவில்லை. அப்படிக் கூறினாலும் அவர் குறிப்பிடும் தொழில்களுக்கும் நான் கூற விரும்பும் தொழில்களுக்கும், வித்தியாசம் இருக்கலாம். அவர் காந்திய முறையில் குடிசைத் தொழில்களைக் கூறலாம் — அது பயன் தருமா, என்று கேள்வியைக் கிளப்பலாம் நான்.

ஆனால், தொழில்கள் எவை யெவை என்று கருதுவதிலே கருத்து வேற்றுமை இருந்தாலும் இருக்க முடியுமே யொழிய உழவர் பெருமக்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறு தொழிலும் தேவை என்பதிலே கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

அரசியல் கட்சிகளின் வலையில் வீழாமல், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்று, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள—பன்முறை.

அதை நான் வரவேற்கிறேன், 'குரல் ஒலிக்க முடியாத இருட்டில் கிடக்கும் ஏழை விவசாயிகளுக்கென்று அமைப்புள்ள சங்கங்கள் அவசியம் தேவை, அதிலும் கட்சிச் சார்பற்ற, விவசாயிகளின் வேதனைகளைப் போக்கப் பாடுபடும் சங்கங்கள் மிக மிகத் தேவை. அதிலும், தன்னலமற்ற, விவசாயிகளின் நலன் கருதிப் பாடுபடும் சங்கங்களாக அவைகள் இருக்கவேண்டும் என்பதையே, முன்னாள் முதலமைச்சரைப் போல நானும் விரும்புகிறேன்.

ஆகவே, இந்த நேரத்தில் ஓமந்தூர் தலைவரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அவரே, விவசாயக் கழகத்தை ஆங்காங்கு ஆரம்பித்து வைக்கவேண்டும். இத்தகைய நல்ல பொறுப்பை ஏற்க, அவரே மிக மிகத் தகுதியானவர். அவர் உத்தமர், பற்றற்றவர், பாராளும் முறை கற்றவர், பயிர்த் தொழில் புரிபவர், மக்களை அறிந்தவர் ஆகவே, அவரே இந்த நற்சேவையின் தூதுவராக விளங்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அதே நேரத்தில், அவர் காலையில் விவசாயிகளுக்கு விடுத்த எச்சரிக்கையை அவருக்கு நினைவூட்டித் தெரிவித்துக் கொள்கிறேன் 'ஓமந்தூரார் அவர்களே! தங்களது உத்தமப் போக்கில், நேர்மைக் குணத்தில் எல்லோருக்கும் நம்பிக்கையுண்டு. எனினும், தாங்கள் காங்கிரசை விட்டு விலகிவந்து, இந்த நல்ல காரியத்தைத் துவக்கி வையுங்கள்" என்று. ஏன், இதை நான் தெரிவிக்க விரும்புகிறேன் என்றால், அவர் காங்கிரசிலிருந்து கொண்டே விவசாயிகளுக்குப் பாடுபடுவதாக முன் வந்தால், அவர் கூறியதைப் போல என் போன்றோர் தவறாக எண்ணிவிடக் கூடும். சரிந்துபோய்க் கொண்டிருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குப் புது வலிவு தேட, புதுவழி செல்கிறாரோ—என்று பலர் ஐயுற இடமேற்படக் கூடும். ஆகவேதான், அவர் காங்கிரசைவிட்டு வெளியேறி, விவசாயிகளுக்காகத் தனது காலத்தைச் செலவிடவேண்டுமென்று விரும்புகிறேன்.

உழவரின் உண்மையான வேதனையை உணராத அரசியல்வாதிகளைவிட வெளியிலே தங்கள் வேதனையைக் கூறத் திறனற்றுக் கிடக்கும் விவசாயிகளின் துயர் துடைக்க அவரைப் போன்ற தலைவர் கிடைப்பது அரிது.

ஆகவேதான் என்னுடைய இந்த ஆசையை அவருக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உள்ளத்தில் தூய்மையோடு எந்த நல்லமுயற்சியிலீடுபட்டாலும், இந்த நாட்டிலுள்ள இன்றைய துரதிர்ஷ்டம், எவரையும் சந்தேகக் கண்களோடு பார்ப்பதாகவே ஆகிவிட்டது. இந்தப் பொல்லாத உலகில் நல்லோர் என்றால் கூட சந்தேகமும் கொள்ளாமலிருப்பதில்லை! இது, என்னைவிட, அனுபவம் வாயிலாக அவருக்கு அதிகமாகத் தெரியும். ஆகவேதான் அரசியல் கவசம் நீக்கிவிட்டு அவர் இத்தகைய நற்சேவையில் ஈடுபட வேண்டுமென விரும்புகிறேன்.

அவர் பலகாலம், சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர். சுயராஜ்யம் பெறவேண்டும் என்பதற்காகப் போராடிய காங்கிரஸ் ஸ்தாபனமும், தனது இலட்சியத்தில் வெற்றிகண்டு விட்டது. எனவே, நிம்மதியோடு, வேதனைப்படும் விவசாயிகளுக்குத் தனது வாழ்நாளைப் பயன்படுத்தலாம், அவர். அத்தகைய நற்பணியில் ஈடுபட்டால், எங்களாலான உதவி, அவருக்கு எப்போதும் கிடைக்கும் என்று உறுதி கூறுகிறேன். நாங்கள் அரசியல் உள்நோக்கம் அற்றவர்கள். வோட்டுப்பிச்சைக்காக அல்ல, நாங்கள் பணிபுரிவது

காலம் மாறுகிறது—கருத்தும் மாறவேண்டும்

ஆகவே, அவர் எங்களை நம்பலாம்— எப்போதும் அவருடைய நற்பணிக்கு எங்களுடைய நல்லாதரவைத் தருவோம்!

எங்களுடைய பணி, அரசியல் இலாபவேட்டையல்ல, என்று குறிப்பிட்டேன். நாங்கள் விரும்புவதெல்லாம் புதுச்சமுதாயம், அமைக்கப்படவேண்டும் என்பதுதான். பழைமை ஒழிந்து அதனால் ஏற்படும் பாதகங்கள் மறைந்து, புதுவாழ்வு மலரவேண்டும்.

பழைமையை வெறுப்பவர்கள்தான் நாங்கள். புதுமைவேண்டுமென்கிறோம், புதுமலர்ச்சி தேவையென்கிறோம், பழைமைப்பாசி அகற்றப்பட்டு புது ஒளி சமுதாயத்தில்பரவவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். ஆனால் அதற்காகப் பழைமை, என்ற காரணத்துக்காக எல்லாவற்றையுமே விட்டொழிக்க வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. கருத்துக்கொவ்வாத 'களை' வயலிலிருந்து களையப்படவேண்டும், நினைவையும், நேரத்தையும் வீணாக்கும் மூடநம்பிக்கைகள் சமுதாயத்திலிருந்து நீக்கப்படவேண்டும்—இதுவே நாம், கூறிவருவது. பழைமை என்பதற்காகத் தூங்குவது, சாப்பிடுவது, ஆகியவைகள் கூடாதென்று கூறுகிறோம்? பழைமைஎன்பதற்காகப் பண்டைய மன்னர்களின் அணைக்கட்டுகள் அழிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறோம்? வானத்தைமுட்டும் கூடகோபுரங்கள், பண்டைப் பெருமையின் பளிங்குமா மண்டபங்கள், படிக்கட்டுகள், இடிந்துபோனகோட்டைக்கொத்தளங்கள், அவைகளிலே நாம் காணும் சித்திரத்திறமை ஆகியவைகளை நாங்கள் அகற்றவேண்டுமென்று சொல்லுகிறோம்? பழைமை என்பதற்காக பற்றுகொள்ளாமலில்லை. ஆனால், கோட்டை கொத்தளங்களைக் கண்டு பெருமை கொள்ளும் அதே நேரத்திலே அந்தக்கோட்டைகளின் இடிந்ததன்மையைக்காட்டி—'எழில்மிகு கோட்டை இடிந்துவிட்டது. ஏன்? நாம்ஏமாளிகளானதால்!' என்று சுட்டிக்காட்டுகிறோம். இழந்த பெருமையை நாம் பெறவேண்டுமென்ற எண்ணத்தால்!

புதுமை மணம் நாட்டிலே பரவவேண்டுமென்று கூறும் நாங்கள், பழைமைப் பாசி அகலவேண்டுமென்று கூறும் நாங்கள், பழங்காலத்திலே ஒன்றுமேயில்லை என்று கூறவில்லை!

அப்போது சிற்சில இருந்தன. அன்றைய தேவை வசதிகளையொட்டி. ஆனால் இப்பொழுது காலம் மாறி வருகிறது, நமது வாழ்க்கை முறையும் மாறவேண்டுமென்கிறோம்.

தோளிலே மண்வெட்டி சுமந்து செல்லும் காலம் மாறி, நிலத்தை உழும் 'டிராக்டர்' ஏற்பட்டுவிட்டது.

ஆனால், டிராக்டரின் பெயரையோ அல்லது அது தரும் நலனையோ, ஒரு விவசாயியிடம் கேட்டுப்பாருங்கள்; மாரியம்மன் தெரிகிற அளவுக்கு இதுபற்றி, அவனுக்குத்தெரியாது.

காலையிலே, ஓமந்தூரார் அவர்கள் வயலுக்குத் தேவையானது உரம் என்பது குறித்து விளக்கினார்கள். உரம் வேண்டும் — வயல் வளமாக! ஆனால் அந்த உரத்தின் பெருமை குறித்து உழவர்களுக்குத் தெரியுமா? பூஜை நேரத்திலே அய்யர் மாட்டு மூத்திரத்தையும் சாணியையும் கலந்து 'பஞ்சகவ்யம் சாப்பிடு' என்று கூறுவதைக் கேட்டிருக்கிறானே ஒழிய, அந்த அளவுதான், மாட்டுச்சாணத்தின் பெருமை குறித்து அறிந்திருக்கிறானேயொழிய, சாணத்தின் பெருமை, அது உரமாகும் அருமை—அறிந்ததுண்டா, நமது விவசாயிகள்?

எருவைப் பாழ்படுத்த எத்தர்கள் பஞ்சாங்கத்தை பயன்படுத்தினர், என்பது அவனுக்குத் தெரியுமா?

இதையெல்லாம் சொன்னால், 'கடவுள் இல்லாதவன்' — என்று, இலேசாகக் கூறிவிட முயல்கிறார்கள். கடவுளை மறுக்கவேண்டும் என்பது, அல்ல எமது நோக்கம். கடவுளை மறுக்கவும், அவரை மறைக்கவும், நாம் என்ன கடவுளினும் மேம்பட்டவர்களா? அல்லது கடவுள்தான் என்ன, நமது பேச்சால் மறைந்துவிடப் போகிறவரா?

இதோ இருக்கிறது மின்சாரம், ஒளி—ஒலி, இரண்டையும் நமக்குத் தந்தவண்ணமாக. சிறு கம்பியின் மூலமாக இத்துணை நன்மையும் நமக்குக் கிடைக்கிறது. அதேபோல கடவுளால் நமக்கு நன்மைகள் கிடைக்கின்றன என்றால் வரவேற்காமலா இருப்போம்?

இதோ நான் பேசிக்கொண்டிருக்கிறேன். எனது குரலை தூரத்திலுள்ளோர் கூடக் கேட்குமாறு, மின்சாரம் செய்துகொண்டிருக்கிறது. சில நிமிடம் திடீரென்று மின்சாரம் தடைபட்டு விட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது, என்குரலை, நீங்கள் கேட்கமுடியாது. அப்போது, அதன் அருமை தெரியும்! எனவே, இத்தகைய நன்மையைத்தரும் மின்சாரம் கூடாது என்று கூறுவோம்? கூறத்தான் நாங்கள் என்ன பித்தர்களா?

எமது பணி, நாட்டுப்புற மக்களுக்குத் தேவையான புத்தறிவைப் போதிப்பதுதான். நமது நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்லாதவர்கள் என்று, குறிப்பிட்டார்கள், முன்னாள் முதலமைச்சர். அவ்வளவு பெரும்பான்மையான கல்வியற்ற மக்களுக்கு கல்வியைத்தருவது என்பது சாத்தியமா? வாழ்நாள் முழுதும் முயற்சித்தாலும் முடியுமா? பலர் வயோதிகப் பருவத்திலிருப்பவர்கள், குடும்ப அல்லல்களில் உழல்வோர் பலர், 'உழைப்பு! உழைப்பு!' என்று அலைவோர் தொகை கோடானுகோடி — இப்படியிருக்கையில் எல்லோருக்கும் பாடபுத்தகங்கள் வாங்கிக் கொடுத்து படிப்புச்

9-ம் பக்கம் பார்க்க)

"நாஸ்தீகம் நாட்டுக்கு நலந்தருமா?"

[எ. மேத்துசலா தீட்டியது]

அரிய நூல்! கருத்தோவியம்!!

விலை அணா 8

மேத்துசலா — ஜெயங்கொண்டம்

கும்பகோணம் A.

12-ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்வு, செல்வத்தைக் கண்டிருக்கும் என்றா நினைக்கிறீர்கள்? வேதனை — ஏழ்மை — கையில் காசில்லாத கொடுமையால் கஷ்டப்பட்டிருக்காமல், சுகத்தோடேயா இந்த ஆராய்ச்சிகளை நடத்தியிருப்பான் என்று நினைக்கிறீர்கள்?

இந்த அருமையை, அத்தகைய விஞ்ஞானிகளின் பெருமையை நாம் எடுத்துச் சொல்லவேண்டும்.

நமது நாட்டு விவசாயிகளுக்கும் மேல் நாடுகளிலே உள்ள விவசாயிகளுக்கும் உடையிலே, உருவத்திலே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம்.

அஞ்சி அஞ்சிச் சாவார், அவர் அஞ்சாத பொருளில்லை — என்று கூறும் அளவில் தானே நமது விவசாய மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையுயர்வது எப்போது! போதிய உணவு இல்லை, வசதியில்லை, வாழ்க்கையே அவர்களுக்கோர் பெருந் தொல்லை. எனினும் மேல் நாட்டு விவசாயிகளைவிட நமது மக்கள், சிறந்த உழைப்பாளிகளாகத் தானே இருக்கிறார்கள். இருந்தும், அவர்கள் வாழ்வு, ஏன் இப்படிக் கிடக்கவேண்டும்? ஆகவே, அவர்களின் வறண்ட தலைக்குக் கொஞ்சம் எண்ணெய்! பஞ்சமடைந்த கண்களுக்கு ஒளி! மனைவி மானமுடன் கட்டிக்கொள்ளத் துணி! அவனுக்கு நாகரீகமான ஆடை! நாலு எழுத்தைக் கற்றுக்கொள்ளக் கூடிய வசதி அவன் குழந்தைகளுக்கு! இதையாவது, ஏன், நாம் அவனுக்கு கிடைக்கும்படி பாடுபடக் கூடாது. அவனிடமிருந்து நாம் பெறும் லாபத்திலே ஏதாவது சிறிது, கொஞ்ச நஞ்சமாவது, அவன் வாழ்க்கைக்காகச் செலவிட்டால் என்ன?

இதை யெல்லாம் அவர்களுக்கு நாம் செய்து தரவேண்டாமா? சமுதாயமும், கிராமவாசிகளுக்கு துரோகம் செய்தால், அவன் வாழ்வை நிமிர்ப்பதுதான் யார்? இதை நாங்களே செய்வோம் — என்று கூறவில்லை, நான். யார் செய்தாலும், இவைகளைப் போக்கவேண்டும், என்று எண்ணாமலிருக்க முடியுமா? அப்படி எண்ணி முன்வருவதுதான் யார்?

ஆகவேதான் நாட்டை ஆண்ட நண்பர் ஓமந்தூரார் அவர்களை, இந்த வாழ்விழந்த வாயில்லாப் பூச்சிகளின் சார்பில், போராடப் புறப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர், முதலமைச்சராக இருந்தபோது, கருத்து வேற்றுமை காரணமாக, நாங்கள் கஷ்டப்பட நேர்ந்ததுண்டு. அப்போதெல்லாம், 'இவ்வளவு நல்லவரா இப்படிச் செய்கிறார்' என்று கூறிக் கொண்டோமே தவிர, 'அவர்தானே — அப்படித்தான் செய்வார்' என்று, நாங்கள் கூறியதில்லை. சமூக நன்மைக்காக, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் போன்றவைகளை அவர் கொண்டு வந்து நிறைவேற்றியபோதும், ஜமீன்தாரி முறை ஒழிப்பு மசோதா வந்தபோதும், எங்களது இயக்கம், அவரை ஆதரித்து நின்றது—தேவை என்று, நாங்கள், குரல் எழுப்பினோம்.

ஓமந்தூரார்—எதிர்க் கட்சியினராலேயே உத்தமர் என்று கூறப்படுமளவு, தமது நேர்மையால் நல்ல பெயர் எடுத்தவர்.

எதிர்க் கட்சிகளின் அடிமூச்சுக் குரலைப் பரிசாகப் பெற்றவர் அவர்!

'ஓமந்தூரார் காலத்திலுமா...?' என்று, எங்கள்மீது சட்டம் பாய்ந்தபோதெல்லாம், அடிமூச்சுக் குரலோடு கேட்டோமே தவிர, 'ஓமந்தூராரா-அவர் அப்படித்தான் செய்வார். அவர் ஆட்சி அப்படித்தான் இருக்கும்' என்று, ஒருதடவை கூட கூறியறியோம்.

எந்த அரசியல் தலைவரும் பிற கட்சியின், அன்பையும் பாராட்டுதலையும் பெறுவதென்பது — சாத்தியமில்லாத காரியம்.

ஆனால், ஓமந்தூரார் அந்தப் பரிசைப் பெற்றார்!

பலவீனர்கள் பாராளுவோராக அமர்ந்திருக்கும் இந்த நேரத்திலே, அவர்களுடைய போக்கைச் சுட்டிக்காட்டி, ஏழை கிராம மக்களுக்குப் பாடுபட நாங்கள் எப்போதும், தயார் என்பதை அவருக்குக் கூறிக் கொள்வதோடு, இந்த நற்சேவைக்காக அவரது பணி பயன்பட வேண்டும் என்பதையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

—

புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன்
★ மணி விழா ★
20-4-51 முதல் 29-4-51 வரை
திருச்சி தேவர் ஹாலில்.
எதார்த்தம் பொன்னுசாமி,
வ. க. த.

7-ம் பக்கத் தொடர்ச்சி

றோம். ஆகவே, துணிவைத் துணை கொண்டு, அந்த காரியத்தில் வெற்றி பெற முனையட்டும். உண்மையுள்ளத்தோடு பாடுபட்டால், எப்படியும் வெற்றி நிச்சயம். அந்தப்பாதை நடப்பார்களா அல்லது 'அழியாத அவமானச் சின்னங்களாவார்களா' என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

'மந்திரிப் பதவிகள் மக்கள் புயல் முன்—சிறுதுசு' இதை அவர்களுக்கு கவனமூட்டி கடமைப் பாதையைக் காட்டுகிறோம். பெருவெள்ளம் மோதிக்கொண்டிருக்கிறது, ஆபத்தை அணைத்து அவமானச்சின்னங்கள் ஆகாதீர்கள்!

★

முக்கியப் பிரச்னை!

“அசெம்பளியில் மூக்குப்பொடி போடுவது அனுமதிக்கமுடியாததாகும். ஆனால் தெரியாமல் மறைவாகப் போடுகிறவர்களை ஒன்றும் செய்ய முடியாது” என்று நமது சென்னை சட்ட சபைத் தலைவர் ஏப், 2; அன்று அறிவித்தார்!!

திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக
சிதம்பரத்தில்
29—4—51-ல்
சி. என். ஏ, நடிக நட்சத்திரம்
கே. ஆர். ராமசாமி பங்குகொள்ளும்
சந்திரமோகன்
நாடகம்.
சிதம்பரம் தி. மு. க.

திராவிட நாடு

ஞாயிறு] 8—4—51 [காஞ்சி

அவமானச் சின்னங்கள் ஆகாதீர்!

'சமூக நீதி, 'ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோரால்' சாக்கடையிலே தள்ளப்பட்டுவிட்டது — சட்டம் என்ற கோல் கொண்டு.

சுப்ரீம் கோர்ட், இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டி, வகுப்புரிமை செல்லுபடியாகாது என்று தீர்ப்பு தந்துவிட்டது.

சட்டம் என்ற கூண்டு! உள்ளே சமூக நீதி!!—தேன் தேடி அலை பவனைத் தேள் கொட்டியது போல, சமநீதி மூலம் தன் ஒடிந்துபோன வாழ்வைச் சீர்படுத்திக்கொள்ளத் துவங்கிய பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றப் பாதையிலே, விழுந்த பேரிடியாகும் இச்சம்பவம்.

திகைத்துத் திண்டாடும் திராவிட சமுதாயம், இரத்தம் கொதிக்க, எண்ணங்கள் கிளர்ச்சி முரசு கொட்ட, எங்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டதா, இருதயத்தையா 'எத்தர்'கள் எடுத்துவிட்டனர், எங்களுக்கா இந்தப் பேரிடி என்று தனது ஒளியிழந்த கண்களிலே நீர் ததும்ப, ஒலியிழந்த குரல்களிலே வேதனை தொனிக்க, கண்ணீர் ததும்பும் கண்கள் மூலம், தனது தலைவர்களைச் சோகத்தோடு பார்க்கிறது.

துடிக்கச் செய்யும் காட்சி! சொந்த நாட்டினர், வாழ்ந்த மரபினர், வயலையும் வாழ்வையும் செம்மைப் படுத்தி உழைத்து உருக்குலையும் உத்தமர் இனம், ஊமையாக்கப் படுகிறது!!

நெஞ்சு கொதிக்கக் கூடிய வஞ்சகச் செயல்! எனினும் என் செய்வது? சட்டம், என்ற கூண்டைச் செய்து, அதற்குள்ளே தள்ளியிருக்கின்றனர், சமூக நீதியை!

கேட்கும் போதே நினைவெல்லாம் அனல வீசத்தான் செய்யும்! நினைத்தாலே, வேகமும் வீரமும் வீறு கொண்டெழத்தான் செய்யும்! குள்ளநரிச் செயல் கொண்டோர் திட்டம் போட்டு, இத்தீங்கைச் செய்துவிட்டனர். சட்டத்தை, அமைத்துத் தந்தவரே 'சட்டம், கூறச் சென்றிருக்கிறார், வகுப்புரிமை வழக்கில்!

இந்த விசித்திர விபத்து, ஏற்பட்ட வகையும், எப்படி என்ற காரணமும், இன்று நாட்டோரெல்லாம் அறிந்ததுதான்.

இதுபோன்ற பிரச்னையொன்றில், வழக்கு மன்றம் ஏறி வம்பு தொடருமளவுக்கு, 'தூங்குபவன் துடையில் கயிறு திரிக்கும்' கும்பல், துணிந்து புறப்பட்டபோதே தக்க ஏற்பாடுகள் மூலம் சம நீதியைச் சாய்க்கச் செய்த 'சதி' என்றே நாமும் பலரும் கருதினோம்.

அந்த நினைப்பு, உண்மையானது மட்டுமின்றி, நம்மைக் கண்டித்த ஊராள்வோர் கண்களையும் திறந்து விட்டிருக்கிறது—இப்போது.

சமூக நீதி, சென்னை நீதி மன்றத்தில் சட்டப் பிரச்னை மூலம், சாய்க்கப்பட்டதுமே நாமெல்லாம் குமுறினோம்—நாடெங்கும் மக்கள் கண்டனத்தைத் திரட்டிக் காட்டினோம், 'சமநீதி வேண்டும்' 'இந்திய அரசியல் திட்டத்தைத் திருத்து' என்ற முழக்கங்களோடு!

நாட்டின் குரலையும், நமது முழக்கத்தையும் கேட்ட ஆளவந்தார் நம்மைப் பார்த்துக் கேட்டனர், 'எங்களுக்கு மட்டுமில்லையா இந்த சிரத்தை — கம்யூனல் ஜி. ஓவின் அருமை அறியாதவர்களல்லவே, நாங்கள்! சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறோம்! அதன் முடிவுகளுக்காகத்திருப்போம்' என்பதாக.

அவர்களது கட்சித் தூதவர்களும், 'நாங்கள் மட்டுமென்ன விட்டு விடுவோமா? கம்யூனல் ஜி. ஓ. வை இழந்துவிட நாங்கள் கையாலாகாதவர்களா? திராவிட இயக்கத்தாரை விட எங்களுக்கும் சிரத்தை உண்டு' என்று பலப் பல இடங்களிலே, கோபத்தோடும், அனுதாபத்தோடும் மன ஆவேசத்தோடும், மனவேதனையோடும் பேசினர்.

சமநீதிப்பிரச்னை, சமுதாய வாழ்க்கையை நிர்மாணிக்கும் ஒரு முக்கிய பிரச்சினை. இது ஒரு கட்சியினருக்கே சொந்தமானதென்றோ இன்னொரு கட்சியினருக்கு ஏற்காததென்றோ, சொல்ல முடியாது. சமநீதி வழங்கும் இந்த நல்ல ஏற்பாட்டைச் செய்து, காக்க, நீதிக்கட்சியே பெரும்பணிபுரிந்தது என்றாலும், அந்த முறையின் அவசியத்தை எதிர்க்கட்சியினரான காங்கிரஸ்காரர்களே உணர்ந்து விட்டனர். ஆகவேதான், அவர்களும், சென்னை நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டதும் திடுக்கிட்டனர். நம்மைப்போலவே, மேடைகளிலே, தங்களுக்குள்ள சிரத்தையை எடுத்துக்கூறினர்.

எப்போதுமே, எங்கிருந்து வந்தாலும் நமது சமுதாய வளர்ச்சிக்கான ஒத்துழைப்பை மறுக்காது வரவேற்கும் பண்புகொண்ட நாம், மாற்றுக் கட்சியினர் என்பதற்காக அவர்களது மன ஆவேசத்தைப் பாராட்டத் தவறவில்லை; அது பலன்தர வேண்டும், அதற்காகப் பாடுபட வேண்டும் என்று ஆசைப்பட்டோம்.

',சுப்ரீம்கோர்ட் போயிருக்கிறோம் அங்கும் நமக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்கவில்லையென்றால்..."

"கிடைக்கவில்லை. என்ன செய்வீர்கள்?"

"என்ன செய்வோமா? இந்திய அரசியல் சட்டத்தையே திருத்தும் படிச் செய்வோம்......"

இப்படி கேள்விகளும், அதற்குப் பதில்களும், அவர்களிடமிருந்து கிடைத்தன.

அதன்படியே, இப்போது, சுப்ரீம் கோர்ட்டில் நமக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்கவில்லை யென்றதும் மந்திரிமார்களும், சட்டசபையினரும் கூடிக்கலந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்கிற தீர்மானத்தைச் சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றுவது என்பதாக, சட்டசபை காங்கிரஸ் முடிவு செய்திருப்பதாக அறிகிறோம்.

அதுவும், மேற்படி தீர்மானம் சென்னை சர்க்கார் சார்பில்,கொண்டு வரப்படும் என்றும் கேள்வியுறுகிறோம்.

இந்த அளவுக்கு, சமநீதிக்காகப் போராடும் துணிவு, காங்கிரஸ் கட்சியினருக்கேற்பட்டதையும், மேடைகளில் முழக்கமிட்டது போல செய்தே காட்டவேண்டும் என்ற நல்லெண்ணம் ஏற்பட்டதையும், காண — மகிழ்ச்சிதான், ஏற்படும், நலம் விரும்பிகளுக்கு.

ஆனால், சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில், அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டுமென அங்கத்தினர்கள் ஏன் வலியுறுத்தினர் என்பது பற்றி, "தினசரி"யில் ஒரு செய்தி, விளக்கமாக வந்துள்ளது. "பொதுத் தேர்தல்கள் நெருங்கிவரும் சமயத்தில் இந்த சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு ராஜ்யத்தில் ஒரு சங்கடமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறதென்றும், இதைச் சாக்காக வைத்துக்கொண்டு மற்றக் கட்சிகள் காங்கிரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய வழி ஏற்பட்டிருக்கிறதென்றும்......ஆகவே கம்யூனல் ஜி. ஓ. பாதிக்கப்படாமலிருக்க ஒரு திருத்தம் கொண்டுவரும் படி இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும்"

சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

இச்செய்தியைக் கேள்விப்பட்டோருக்கு, 'இதுகூட தேர்தலுக்காகத்தானா?' என்று கேட்கத்தோன்றும். எப்பொழுது பார்த்தாலும் எது செய்தாலும் தேர்தலுக்காகத்தான் செய்கிறார்களா — மக்களுக்குத்தாங்கள் செய்யும் பணி என்று கருதுவதில்லையா?' என்று கேள்வி எழுப்பவும் தோன்றும்.

அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்! உள்ளத்திலிருப்பதைகொட்டியிருக்கிறார்கள்—கரும்பு தின்போரல்லவா, அதை இழக்கக்கூடாது, அதற்கு இது ஒரு காரணமாகிவிடலாமே என்ற பயத்தால்.

பயமோ, பலவீனமோ எது காரணமானாலும் அவர்கள், மக்கள் மன்றத்தில கம்யூனல் ஜி, ஓ. வுக்கு இருக்கும் ஆதரவையும் மதிப்பையும்,உணர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதுமட்டும் மேற்படி தகவலிலிருந்து விளங்குகிறது.

எனவேதான், நாம் மகிழ்கிறோம்—பொதுமக்கள் கருத்து, என்பதற்குச் சிறிதேனும் மதிப்போ மரியாதையோ காட்டாத — காட்டவும் தெரியாத! — இந்த ஆளவந்தார், இந்த முக்கிய பிரச்னையிலும், தூங்கி வழியாமல், துணிவோடு சில காரியங்களைச் செய்ய முற்பட்டிருப்பதால்.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் மேற்படி முடிவில் எத்தகைய உள்நோக்கம் இருப்பினும், அந்த முடிவைச்செய்த காங்கிரஸ் கட்சியின் 'விட்டு ஓடாத' தன்மையைப்பாராட்டத்தான் வேண்டும்.

கம்யூனல் ஜி. ஓ. பிரச்னையை,சர்க்கார், தங்களது பிரச்னையாகக் கருதி நடவடிக்கை எடுக்க முனைந்திருப்பது, மாபெரும் சமுதாயமொன்றின் வேதனை நிலையையும், அதற்கான காரணத்தையும அவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் — நம்மையெல்லாம் வகுப்புத்துவேஷிகள், வகுப்புவாதிகள் என்று தூற்றினாலும் துயர் அம்புகளை வீசினாலும் — என்பது, தெளிவாகத் தெரிகிறது.

அதிலும்,

"தீர்மானம் நிறைவேறாவிட்டால் மந்திரி சபை ராஜிநாமா செய்யவும் தயங்காது என்று ஒரு வட்டாரத்தினர் சொல்லிக்கொள்ளுகின்றனர்" என்பதாகவும், "தினசரி" மூலம் மேலுமொரு தகவல் கிடைக்கிறது.

ஒரு வட்டாரத்தினர் சொல்லிக்கொள்ளுகின்றனராம்! — எந்த வட்டாரத்தினர், எவரெவர், என்பதை, தினசரியார் தெரிவிக்கவில்லை. அந்தளவு துணிவு வராததோ, அல்லது சொல்லக்கூடாதென்பதோ நமக்குத் தெரியவில்லை.

எனினும், 'பதவியே பெரிது' என நினைக்கும், காங்கிரஸ் மந்திரிமார்கள், இந்த உயிர்ப் பிரச்னையில் சிரத்தை காட்டுவது, வரவேற்கக்கூடியவிஷயம்தான்.

இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துக!—என்ற, தீர்மானத்தை செய்து, அதன்படி மக்களுக்குச் சமநீதி உரிமையைப் பெற்றுத் தரப் போராடுவதில், இந்தச் சர்க்காருக்குள்ள தொல்லைகளை நாம் அறியாமலில்லை.

இந்திய சட்டசபையில், இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதற்கான ஆதரவும் வரவேற்பும் கிடைக்குமா — என்பதும், நியாயமான கேள்விதான்.

ஆனால், மாகாண சர்க்கார் சார்பில் வலியுறுத்தப்பட்டு இத்திருத்தம் மத்திய சர்க்காராலயே கொண்டு வரப்படுமானால், அது நிறைவேறுவதில் எத்தகைய சங்கடமும் இல்லை.

ஏனெனில், மத்திய சர்க்காரே இந்தச் சட்டஷரத்தைத் திருத்தி புது விதி கொண்டு வருகிறது என்றால், அதற்கு—வழக்கம்போல!— அங்கத்தினர்களின் ஆதரவு கிடைக்காமற் போகாது.

எனினும், அந்த அளவு, மத்திய சர்க்காரின் பீடத்திலிருக்கும் 'பிம்பங்களை'த் தாண்டி இந்தக் காரியத்தைச் செய்ய, உறுதியோடு இருப்பார்களா, சென்னை சர்க்கார்-என்ற ஐயம், அவர்களின் நான்கு ஆண்டு ஆட்சியைக் கவனித்து வந்தோருக்கு ஏற்படாமற் போகாது.

சமநீதிப் பிரச்னை—வாழ்விழந்து வதைபட்டுக் கிடக்கும் ஒரு மாபெரும் சமுதாயப் பிரச்னை.

சண்டமாருதவேகத்தாலோ, அல்லது ஆர்ப்பரிப்பாலோ இதில் வெற்றி பெற முடியுமா என்பது சிந்தனைக்குரிய விஷயம்.

நமது, ஆசையெல்லாம், நமது சமுதாயத்துக்கு நலன் தரும் 'உயிர்நாடி' பறிபோகாமல் தடுக்கப்படவேண்டும் என்பதுதான்..

ஆகவே, நல்லெண்ணத்தோடு நம்புகிறோம், சென்னை சர்க்கார் தீரத்தோடு, இதற்கான முயற்சிகளைச் செய்யுமென்று.

சர்க்கார் சார்பில் முயன்றால்தான் வெற்றி காணமுடியும். அதுவும், மத்திய சர்க்காரை வலியுறுத்தி, அவர்கள் மூலமே சட்டத் திருத்தம் கொண்டு வந்தால்தான் இந்திய சட்டசபையில் 'எதுவும்' ஏற்படாது, நிறைவேற்றப்படும்.

இல்லையெனில், யாரோ ஒருவர் ஒரு திருத்தம் கொணர்வது என்றால், அதை வீழ்த்துவதென்பது 'பிம்பங்களை'க் கொண்டுள்ள 'எத்தர்களுக்கு' மிக மிக இலேசான காரியம்!

ஆகவே, தங்களது வாழ்வு சாவுப் பிரச்னையாக, சென்னை சர்க்கார், சமநீதிப் பிரச்னையைக் கருதுவார்களென விரும்புகிறோம்—எதிர்பார்க்கிறோம்.

நமது ஓயாத ஆசை, கம்யூனல் ஜி. ஓ. நம்மிடமிருந்து பறிபோகக்கூடாதென்பதுதான்.

அதைச்செய்து தரும் பொறுப்பும், வசதியும் சர்க்காரிடமே இருக்கிறது.

ஆகவே, துணிவோடு ஏழைமக்களின் வேதனைக்குரல் தீர்க்க, 'சென்னை' போராடட்டும்.

மக்களின் இதயவேகம் அறிந்தவர்கள் இவர்கள், என்றே நம்பு

(5—ம் பக்கம் பார்க்க)


அதிசயமான கற்பனை!
அசாதாரண நிகழ்ச்சிகள்!
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்
ஓர் இரவு
விரைவில் வருகிறது
AVM
புரொடக்ஷன்ஸ்
C.N. அண்ணாதுரை M.A.

நாங்கள் கட்டிடமில்லாத கல்லூரி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லித்தருவது, சாத்தியமா? முடியாது — எனவேதான் பொது அறிவு, அவர்களுக்கெல்லாம்கிடைக்கும்படியான பெரும் பணியைச் செய்து வருகிறோம். கட்டிடமில்லாத கல்லூரிகள்தான்—நாங்கள்!

நமது மக்கள் எது தேவையில்லையோ அதைப்பற்றி அதிகம் தெரிந்தவர்களாயிருக்கிறார்கள். எதைப் பற்றி அவசியம் தெரிந்துகொள்ள வேண்டுமோ அதைப்பற்றி அக்கறை கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக, டிராக்டரைப் பற்றி, ஒரு விவசாயியைக் கேளுங்கள். "இயந்திரக் கலப்பை தெரியுமா?" கேளுங்கள் — 'தெரியாது' என்பார். காட்டுங்கள், அதைப் பற்றிக் கவலைகொள்ள மாட்டார். எங்கே செய்தது, யார் கண்டு பிடித்தது, எப்போது கண்டு பிடித்தது என்றெல்லாம் கேட்கவேண்டுமென்கிற ஆசையும் எண்ணமும் அவருக்கு எழும்பாது.

ஆனால் அதே உழவர் பட்டினமேல போய்க்கொண்டிருக்கிறார். தூரத்திலே குன்று ஒன்று தெரிந்து அதன் உச்சியில் கோபுரம் ஒன்று தெரிந்தால் கன்னத்தில் போட்டுக் கொண்டு, பக்கத்திலே இருப்பவரைக் கேட்பார், என்ன கோயில், அங்கேயிருக்கும் சாமி எது, அதற்கு எப்போது திருவிழா என்றெல்லாம் பக்தி சிரத்தையோடு கேட்பார். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அவர் கோயில் விசாரணை புரிவது தவறு என்றோ கூடாது என்றோ நான் கூறவில்லை.

ஆனால், இதில் காட்டப்படுமளவு சிரத்தை, ஏன் இயந்திரக் கலப்பையிடம் காட்டப்படவில்லை.

இந்த மனப்பான்மையைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

புதுமைகளைப்பற்றி புரிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறை நமது மக்களுக்கில்லை. கேட்டுப் பாருங்கள், 'ஓமாந்தூர் எங்கே இருக்கிறது. ஓமாந்தூரார் இருக்கிறாரே, அவருக்கு எத்தனை குழந்தைகள்? மனைவியார் இருக்கிறார்களா?' என்று, 'தெரியாது— தெரியாது' என்றே பதில் சொல்வார், கிராமவாசி. அதே கிராமவாசியைக் கேளுங்கள், 'கைலாசம் எங்கே இருக்கிறது?'—உடனே காட்டுவார் ஆகாயத்தை, ஏதோ போய்ப் பார்த்துவிட்டு வந்தவர்போல. 'பரமசிவனுக்கு எத்தனை குழந்தைகள்?' கேட்டுப் பாருங்கள், அவரை. ஏதோ, இவர் வீட்டுக்குப் பக்கத்தில்தான் பரமசிவன் குடியிருப்பது போல 'இரண்டு குழந்தைகள். மூத்தவர் விநாயகர் — சின்னவர் சுப்பிரமண்யன்' என்று சொல்வார். அவரை, நமது மாகாணத்தின் வருமானம் செலவு பற்றிக் கேளுங்கள்—விழிப்பார்! ஆனால், உடனே நமது மாயலோக வரவுசெலவைக் குறித்து வைத்துக் கொள்ளும் 'சித்திரகுப்தன்' பற்றிக் கேட்டால், கனைத்துக் கொண்டு பேசத் துவங்குவார்.

இது தேவையா, அது தேவையா என்பதுகூட அல்ல, நான் கேட்க விரும்புவது. கண்ணிற் காண முடியாதவைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதில் உள்ள அக்கரை, நமக்கு நன்மை தரும் விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் மட்டும் ஏன், இல்லை?

இந்த நிலை நீடித்தால், பொது அறிவு பரவுமா, பிற தேசங்களுக்கு ஒப்பாக நமது மக்களும் முன்னேறத்தான் முடியுமா. அல்லது நாம் எப்போதும்போல இருந்து விடுவதென்பதுதான் இயலுமா?

காலையில் விவசாய சம்பந்தமாக நல்ல புள்ளி விபரங்களை, ஓமாந்தூரார் தந்தார்கள். அவசியமான, பயன் தரத்தக்க விபரங்கள் அவை. அந்த விபரங்கள் நம்மோடு இருந்து விட்டால் போதாதே. அவை கிராமங்கள்தோறும் நிலைக்க வேண்டுமே! ஒவ்வொரு கிராமத்திலும், அது போன்ற புள்ளி விபரங்கள், ஆங்காங்கே உள்ள பொதுச்சாவடிகளில் இடம் பெறவேண்டும். ஓய்வுநேரத்தில், அவைகளைப் பார்த்துப் பொது மக்கள், விளக்கம் பெறும் வகையில் செய்யவேண்டும். ஆனால் இப்போதுள்ள ஊர்ச்சாவடிகளில் எதைக் காண்கிறோம்? வேம்பு, அதற்கடியில் சிறு கல், அதற்குத் திருவிழா, கொண்டாட்டம்! இப்படித்தானே நேரமும் நினைப்பும் பாழாகிக் கொண்டு வருகிறது. இதற்குப் பதில், இந்த வீண் விழாக்களால் செலவழியும் தொகையைக்கொண்டு, ஏன், அந்தச் சாவடிகள் யாவும் பொதுஅறிவு பரப்பும் மூலங்களான கல்விச்சாலைகளாக மாறக்கூடாது?

கிராமத்து மக்களுக்கு இந்தியாவின் அகல நீளம் தெரியுமா? அது கூட வேண்டாம், சென்னை மாகாணத்தில் வாழும் மக்கள் தொகை தான் தெரியுமா? இதையெல்லாம் அவர்கள் அறிந்துகொள்ள, ஆளுக்கொரு பூகோளப் புத்தகம் வாங்கித் தர, நேரம்தான் உண்டா, அல்லது அதற்கான நிதிதான் இருக்கிறதா, அல்லது இந்தச் சர்க்காரால் தான் முடியுமா?

ஆகவே, அவர்களுக்கு இதுபற்றியெல்லாம் விளக்கி, பொது அறிவுள்ளோர்களாக்க, கிராமக் கண் காட்சிகள்—இந்த வகையில், மிக மிகப் பலன் தரும்

ஆனால், இதையெல்லாம் செய்ய முற்படும்போது நாம் ஒன்றை மறந்துவிடக் கூடாது.

இதுவரையில், கிராம மக்கள், எத்தனை உலகங்கள் என்று கேட்டால் அதல, சுதல, பாதாளம் என்றே கூறிப் பழக்கப்பட்டவர்கள். அதையே நாமும் நம்பியோர்களாக இருந்துகொண்டு, ஆப்ரிக்காவின் நிலை, அமெரிக்காவின் பெருமை, ஆஸ்திரேலியாவின் சிறப்புப் பற்றி கூற முடியுமா?

ஆகவே, பொது அறிவு பரப்ப முற்படும் போது, பிறநாட்டின் படத்தைப் போட்டுக்காட்டும் போது, அங்கே வாழும் மக்கள், நிலை, அவர்கள் வணங்கும் தெய்வம், ஆகியவைகளையும் படங்கள் மூலமே விளக்கவேண்டும்.

இது அமெரிக்கா படம்—இங்கு வாழ்வோர் கிறிஸ்தவர்கள்—அவர்கள் வழிபடுவது இயேசுநாதரை என்று நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அதே நேரத்தில், நமக்குள்ள மூல தெய்வங்கள் மூன்று, சில்லரைத் தெய்வங்கள் முப்பத்து முக்கோடி என்பதையும் எடுத்துக்கூற வேண்டும்.

இதை நான் கூறும் நோக்கம், சாமி குறையவேண்டும் என்பதல்

இரண்டு உலகங்கள் என்று ஒன்றுவது?

சாமிகளுக்காகச் செலவழியும் நேரத்தையும் நினைப்பையும் குறிப்பிடத்தான்.

கண் காட்சிகள் மூலம் கிராம மக்களுடைய பொது அறிவைத் தட்டி எழுப்பவேண்டும். அதே நேரத்தில் நாம் கூறும் பல கருத்துக்களையெல்லாம் அவர்கள் ஜீர்ணித்துக் கொள்ள வசதி செய்து தரவேண்டும். நமது கிராம மக்களுக்கு, எது நல்லது, எது கெட்டது என்பதைப் பகுத்தறியும் திறன் நிறைய உண்டு. உரைத்துப் பார்க்கவும், நிறை போட்டுணரவும், சலித்துத் தெரியவும் விவசாயிகள் நன்கு அறிவர்.

ஆகவே, இதுபோன்ற நல்ல ஏற்பாடுகள் மூலம், அவர்கள் பொது அறிவை வளர்த்தால்தான் கிராமம், நகரம் என்ற பேதம் தெரியாது.

இன்றைய சமுதாயத்தில் இரண்டு உலகங்கள் இருக்கின்றன. ஒன்றையொன்று தூற்றிக்கொள்வதும் பழித்துக்கொள்வதுமாக இருக்கின்றன. இந்த உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. நகரம் — கிராமம், இரண்டுக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள பிளவு இருக்கிறது. இரண்டையும் நிரப்ப, பாலம் அமைக்க நாம் பாடுபடவேண்டும். இது சாதாரணமானதல்ல; மிக மிகச் சிரமமான காரியம்! இதிலே, ஒருத்தர் நுழைந்தால், அவரோடு ஒத்துழைக்க, நாம் தயாராக இருக்கிறோம். அவர் நல்லதொரு பெயரை — மக்களிடம் பெற்றுவிட்டார். காங்கிரசிலே இருந்து பணி புரிந்து, அதன் பலனையும் பெற்றுவிட்டார். எனவே மனதிலே புதுத் தெம்போடு, ஜய கோஷத்தோடு வரலாம். விவசாயிகள் சார்பாக நின்று போராடவும், அலைக் கழிக்கும் அரசியல் கட்சிகளின் வலைகள் வீசப்பட்டாலும் அவர் தயங்கார்!

இதுபோன்ற மகத்தான பணியை அவர் போன்ற நல்லவர்தான் ஏற்க வேண்டும்,

ஒரு நாள் பேசினார், சென்னை மேல் சபையில், ஆளவந்தார் போக்குக் குறித்து. அன்று அரசியல் வாதிகள் பலரிடையே புயலும், தென்றலுமல்லவா வீசிற்று! பலப் பலவல்லவா, எண்ணத் தூண்டிற்று அந்தப் பேச்சு? மக்கள் இனி என்ன நடக்கும் — என்று எதிர்பார்க்கும் ஆசையல்லவா, அரும்பிற்று! அந்த அளவுக்கு, அவருடைய வார்த்தைகளிலே உரம் இருக்கிறது. அவருடைய அறிவும் ஆற்றலும் நல்ல உரமாக, இந்நாட்டு ஏழைக் கிராம மக்களுக்கு, பயன்படவேண்டும். ஆகவேதான், அவர் பழைய கூடாரத்தை விட்டு, வெளியேறவேண்டும் என்று குறிப்பிட்டேன். காங்கிரசிலேயே இருந்து கொண்டு இந்த நல்ல காரியத்தைச் செய்யலாமே என்று கருதினால், காங்கிரசிலே இருந்துகொண்டு அதற்கு வரும் கெட்ட பெயரை மறைக்கத்தான் இப்புது முயற்சி என்றே எண்ணத் தோன்றும் — என்போன்ற பலருக்கு. ஆகவே, இந்த அருமையான முயற்சியை, அவரே தாங்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது விவசாயத் துறையிலே, நிலத்திலே நேரடியாக உழுபவர்கள், மேற்பார்வை பார்ப்பவர்கள் கண்ணெடுத்தும் பாராது களத்திலே நெல், கண்டுமுதலாயிற்றோ என்று கணக்குக் கேட்போர், காரை விட்டு இறங்காது நகர்ப்புறத்திலே 'கிராமம் — அங்கே, எனக்கு,' என்று கூறிக்கொண்டுலவும் நாகரீகச்சீமான்கள் எனப் பல வகையினர் இருக்கிறார்கள். இவர்களுக்கு இடையிலே உள்ள வித்தியாசம் — மிகமிகக் கேடு தருவதாகும்.

என்னுடைய கருத்து, உண்மையான விவசாயிகளிடமே, யார் நிலத்தில் இறங்கிப் பாடுபடுகிறார்களோ அவர்களிடமே, நிலம் இருக்க வேண்டும் என்பதுதான். இந்த என் கருத்தை, முன்னாள் முதலமைச்சருடைய சிந்தனைக்குவைக்கிறேன்.

ஓரே இடத்தில் நிலம் அதிகம் குவிந்து கிடப்பதும், பலரிடத்தில் சிறுசிறு நிலங்கள் இருப்பதும், கூடாது. அதனால், விவசாய முன்னேற்றம் ஏற்பட வழியில்லை. அது மட்டுமின்றி, நவீனமுறைகள், விவசாயத்துறையிலே, புகுத்தப்பட வேண்டும். இதற்கான முயற்சியிலே சர்க்காரே ஈடுபட வேண்டும் என்பது எனது விருப்பம். உழவுமுறையில், சர்க்கார் பத்துக் கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே பரீட்சார்த்த கூடங்களை ஏற்படுத்த வேண்டும். யாருக்கு உண்மையாகவே, விவசாயம் தெரியுமோ அவர்கள் வசமே விவசாயக் கருவிகள் நிர்வகிக்கும் பொறுப்பு அளிக்கப்படவேண்டும். அப்போதுதான் ஏழை கிராமமக்களும், விவசாயப் பொருள்களைப் பெற்று, நலம் பெற முடியும். இலாகாத் தலைவர்கள் வசம் பொறுப்பு இருப்பதால் நிலம் அதிகம் படைத்தோரின் தர்பாரே நீடிக்கும்! இது போன்ற, பலன்களை விவசாயிகள் பெறவேண்டுமென்றால், அவர்களுக்குள்ளே நல்ல கட்டுப்பாடான விவசாய சங்கங்கள், மிகமிக அவசியம்.

அப்படிக் கட்டுப்பாட்டோடு கடமையுள்ளத்தோடு தங்கள் கோரிக்கைகளைப் பெற நல்ல கிளர்ச்சிகள் செய்தால், தப்பாக நினைத்து, தங்களை எதிர்ப்பதாக எண்ணி, ஆட்சி நடத்துவோர் அடக்கு முறைப் பாதை சென்றால், அதைக் கண்டிக்கத் தவறக்கூடாது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் சங்கம் அமைத்தனர். ஆனால், அதிலே பொதுவுடைமை வாதிகள் புகுந்தனர். விளைவு என்ன ஆயிற்று? வயலிலே பிணம்! வாய்க்காலிலே இரத்தம்! போலீஸ் தர்பார்! பெண்களின் கூக்குரல்! அழுகுரல் — ஆபாசமான காட்டுமிராண்டித் தர்பார்! தலை தூக்கி, தாண்டவமாடிற்று.

இதில் யார் செய்தது சரி, எது நியாயம், என்பதையல்ல நான் கூற விரும்புவது.

விவசாயிகள் மத்தியில், அவர்கள் வேதனை களையச் செல்வது என்பது வெறும் பட்டாசு கொளுத்துவது போன்றதல்ல; தீப்பந்தம் தாங்கி வெடிமருந்துச் சாலைக்குள் நுழைவதுபோல ஆபத்து நிறைந்தது!

ஆகவேதான், தீப்பந்தம் அங்கே நெருங்குதல் கூடாது; அரசியல் வாதிகள் போகக்கூடாது என்பதை நான் அவ்வளவு வலியுறுத்துகிறேன்.

இந்தப் பொல்லாத உலகிலே எவ்வளவு நல்லவரானாலும் மாசு, மறு கற்பிப்போர் இருக்கத்தான் செய்கின்றனர். இல்லையென்றால், முன்

விவசாயியின் இரத்தத்துளி–நமது புள்ளிவிபரம்!

னார் முதலமைச்சராகிய ஓமந்தூர் ராமசாமி அவர்கள் மேல்சபையில் பேசியபோது, சர்க்காரின் போக்கு இப்படியேபோய்க்கொண்டிருந்தால், போராட்டம் துவக்கும்படி நேரும் என்று வேதனையோடுகூற, இந்நாள் முதலமைச்சர் குமாரசாமி ராஜா 'என்ன போராட்டம்? சத்யாக்கிரகம் செய்வீர்களா!' என்று கிண்டல் தொனிக்க, வேடிக்கையா பேசுவார்? இந்த விபரத்தைப் பத்திரிகைகளில் கண்டபோது, இந்தப்பதில் எமது இதயத்தையெல்லாம் புண்படுத்திற்று. வேதனையோடு பேசினார் முந்நாள் முதல்வர் என்றால் வேதனை போக்கும் நிலைகொண்ட இந்நாள் முதல்வர் கேலியா செய்வது!

இந்தச் சம்பவம், ஆட்சிப்பீடம் அமர்ந்தோர் எவ்வளவு தூரம் ஆதிக்கக்காரர்களாகிவிட்டனர் என்பதையல்லவா காட்டுகிறது. இப்படி ஆதிக்க வெறி அதிகமாகுமேயானால் தடுத்து நிறுத்தாமல் விடக்கூடாது. அதற்குப்பலம் வேண்டும்; பலாத்காரமல்ல. நெஞ்சுரம் வேண்டும், நேர்மைத்திறம் வேண்டும்.

விவசாயி சிந்தும் வியர்வை சொல்லமுடியாது. சர்க்கார் தரும் கொடுமை, சமுதாயம் காட்டும் பரிவற்றதன்மை,வேதனையானது. காலையிலே கோழி கூவுமுன் எழும்பி கோட்டான் கிளம்பியபின் வீடு திரும்புகிறான் விவசாயி. வழியிலே தேளோ, நண்டோ, வயலிலே பாம்போ பூச்சியோ எதுவும் அவனைத்தடுப்பதில்லை. அப்படி உழைத்துப்பொருள்களைக் குவிக்கிறான். அப்பொருள்களைவைத்துக்கொண்டு கள்ளமார்க்கெட் புரிகின்றனர் ஒரு சாரார், அவனைப் பராமரிக்கும் பொறுப்புக் கொண்ட பாராள்வோரோ அவனைப் பதைத பதைக்கச் செய்கின்றனர்.

உற்பத்தியாகும் பொருள்களின் புள்ளி விவரங்களைப்படிக்கும்போது எனது கவனமெல்லாம் இவ்வளவு உழைப்புச்சக்தியைத்தர எவ்வளவு கஷ்டநஷ்டமடைந்திருப்பர்விவசாயி மக்கள் என்றே எண்ணிக்கிடந்தேன் இவ்வளவுடன் என்று எளிதாகப் புள்ளிவிபரம் தருகிறோம். ஆனால் அந்தப் புள்ளிவிபரம்பெற,விவசாயிகள் சிந்திய வியர்வை, கொட்டிய இரத்தம்!

அப்படிப்பட்ட மக்கள் நிரம்பிய கிராமங்களிலே பாதை பழுது, பள்ளி கிடையாது, வைத்தியவசதி இல்லை இவை மாறவேண்டாமா? மாறி, கிராமம்—நகரம் என்ற வித்தியாசமே அற்றுப் போகவேண்டும். இதை மனதில் கொள்ளாமல், கிராமசேவைக்கு கிளம்புவது, பயன் தராது!

நாகரீக வசதிகள் கிராமத்திற்கும் பரவவேண்டும். நல்ல ஆஸ்பத்திரி ஒழுங்கான பள்ளிக்கூடம், நல்ல பாதை, ஆகியவைகளைப் போடவேண்டுமேயொழிய 'நந்தனார் கீர்த்தனை'யை பாடிக் காட்டினால் போதாது. அதிலும் இந்தக் காலத்து நந்தன், சிதம்பரம் திரும்ப மாட்டான்; ஒருவேளை மாஸ்கோவுக்குப் புறப்பட்டாலும் புறப்படலாம்!

ரஷ்யாவிலே கிராமத்துக்கும் நகரத்துக்கும் வித்தியாசம், அதிகம் இராதாம். காரணம், அவ்வளவு வசதிகளும் அங்கேஉண்டாம். நான் படித்ததாக ஒரு ஞாபகம்; புரட்சி வீரர் லெனின் மரணப்படுக்கையில் கிடக்கிறார். அவரைச்சுற்றி அவரது தோழர்கள் சோகமாகநின்றுகொண்டிருக்கிறார்கள். சோகமாகத்தோழர்கள் நின்றுகொண்டிருப்பதைக் கண்ட லெனின், ஒருவரை அழைத்து ஏன் இப்படி வருத்தப் படுகிறீர்கள், என்றாராம். அதற்கு அத்தோழர், 'எமது வழிகாட்டியாகிய நீங்களோ மரணப் படுக்கையில் கிடக்கிறீர்கள். இனி, யாரிருக்கிறார்கள் ரஷ்யாவைக்காப்பாற்ற...?' என்று அழுதவண்ணம் கூறினாராம். அதற்கு லெனின், 'கவலைப்படாதீர்கள். எனக்குப் பிறகு மின்சாரம் இருக்கிறது' என்றாராம்.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், மின்சார வசதி பூரணமாகக் கிடைத்துவிட்டால் மக்கள் வாழ்வில் கவலையேற்படக் காரணமில்லை! ஆகவே, அதுபோல நமது நாடெங்கும் மின்சார வசதி பரவவேண்டும், விஞ்ஞான அறிவு மூலம் அது பயன்படுத்தப் படவேண்டும்.

விஞ்ஞான அறிவை நம்மனோர் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிற நேரத்தில் இன்னொன்றும் கூற விரும்புகிறேன். அது, நம்மவர் விஞ்ஞானத்தை மதிக்கப் பழகவேண்டும்—கிராமவாசிகள் இன்னும் சாவடிப் பிசாசு, சந்திரத்துப் பேய் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்களேயொழிய ஒலிபெருக்கி, கம்பியில்லாத் தந்தி, கப்பல், கடலுக் கடியில் செல்லும் கப்பல் ஆகியவை குறித்துச் சிந்திக்கவும் இல்லை!

இந்த விஞ்ஞான சாதனங்களைக் கண்டுபிடித்தோர், எத்தனை நாட்கள் இரவிலே தூங்காமல் புரண்டிருப்பர். எத்தனை காலம், தங்களுடைய அரும்பணி,மூலம் இந்தச்சாதனங்களைக் காண கஷ்ட நஷ்டப்பட்டிருப்பர். பட்ட வேதனை! தூங்காத இரவுகள்! தாங்கிய தொல்லைகள்! கொஞ்சமாகவா, இருந்திருக்கும்.

சாதாரணமாக இந்த ஒலிபெருக்கியைச் செய்தவர், நினைத்ததுமா செய்து முடித்திருக்க முடியும்! பல தடவைகள் முயற்சி தோல்வியில் முடிந்து, கடைசியில் ஒரு தடவை வெற்றி கண்டிருப்பார்.

ஆனால், நமது மக்கள் அந்த விஞ்ஞானிகள் சிந்திய வியர்வையைப பற்றி என்றாவது எண்ணியதுண்டா?

ரயிலிலே செல்கிறோம், காரிலே போகிறோம், சைகிள், மின்சார விளக்கு — எல்லாவற்றையும் நாம் அனுபவிக்கிறோம். இவையாவும் நாம் அனுபவிக்க ஏற்பட்டவை என்ற எண்ணத்தில், மாமியார் வீட்டு மருமகனைப் போலத்தானே இருக்கிறோம்!

இவைகளைப்பற்றி, என்றாவது நாம் சிந்தித்ததுண்டா? நினைத்ததுண்டா?

இல்லையே! என்ன பிரயோசனம்? குத்து விளக்கு அளவில்தான் நாம் இருக்கிறோமே யொழிய சாதாரண

சென்னை சூளை மக்கள் மறுமலர்ச்சி மன்ற முன்னாள் தலைவரும், சென்னை குடியிருப்போர் சங்கச் செயலாளருமான தோழர் எம். பி. வி. ராகவன் உடல் நலம் குன்றி, தற்போது ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதை அரண்மனை வைத்தியர் எஸ். டி. மாணிக்கம் தோழர்களுக்குத் தெரிவிக்கிறார்.

காலம் மாறுகிறது கருத்து மாறவேண்டும்

அரிக்கன் விளக்கு அளவுகூட நாம் முன்னேறவில்லையே! இங்குள்ள மின்சார விளக்கு திடீரென்று அணைந்து விட்டால் எவ்வளவு பதைக்கிறோம். நமக்கு மட்டுமல்ல சங்கராச்சாரியார் இருக்கிறாரே, அவருக்குந்தான் ஏற்படுகிறது, பதைப்பு!

ஆனால், அதன் அருமை பெருமையை, தெரிந்துகொள்ள வேண்டிய அளவுக்குத் தெரிந்துகொண்டிருக்கிறோமா? இல்லையே! அது மட்டுமா, நவீன வசதிகளை நன்றாக அனுபவித்துக்கொண்டே அவைகளை இகழ்ந்தும் அல்லவா பேசுகிறோம்.

இது நல்லதா? விஞ்ஞானத்தை இகழ்ந்து பேசுவது மிக, மிகத் தவறு. விஞ்ஞான மனப்பான்மையை இகழ்ந்தால், எப்படி அதன் மீது மதிப்பு வரும், மக்களுக்கு?

விஞ்ஞானத்தால், அஞ்ஞானம் வளர்ந்து அணுகுண்டு வரைக்கும் வந்து அழிவு சக்தி பெருகிவிட்டதாகச் சிலர் ஓலமிடுகின்றனர்—அதிலும் வேடிக்கை, யார் விஞ்ஞான வசதிகளை அதிகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களே பேசுகின்றனர்! அப்படிக் கூறுவோரைக் கேட்கிறேன், இப்போது மட்டுந்தானா அழிவுக்கான கருவிகள் இருக்கின்றன? முன்பிருந்ததாகக் கூறப்படும் மோகனாஸ்திரம், அக்னியாஸ்திரம், வருணாஸ்திரம் எல்லாம் அழிவுக்குத்தான் அப்போதும் பயன் பட்டதாகப் படிக்கிறோமே யொழிய, எங்கேயாவது எடுத்துக் காட்ட முடியுமா, 'மழையில்லாமல் மக்கள் அவதிப்பட, உடனே வருணாஸ்திரம் விடப்பட்டது. மக்களுக்கு மழை, நீர் கிடைத்தது' என்பதாக. ஆகையால், அழிவுக்குத்தான் அப்போதும் பயன்பட்டன.

ஆகவே, வெளிநாட்டு விஞ்ஞானிகளை அஞ்ஞானிகள் என்று தூற்றுவதால் நம்மையே நாம் கெடுத்துக் கொள்கிறோம். நன்மையும் தீமையும் எங்கும், எதிலும் உண்டு. ஆகவே உண்மையான விஞ்ஞானத்தின் மேன்மையை நாம் மதிக்கவேண்டும்.

விஞ்ஞானத்தால் நமது நேரமும் உழைப்பும் எவ்வளவோ மிச்சமாகிறது! பத்து ஆண்டுகளுக்குமுன், ரோடுபோடுவதென்றால், ஒரு பெரிய கருங்கல் உருளையை பத்துப் பனிரண்டுபேர், மாடுபோல இழுப்பர்! ஆனால் இப்போதோ சிறுமெஷின்—ஒரு உருளையல்ல, மூன்று உருளையை உருட்டுகிறது!

விஞ்ஞானத்தின் மூலம், குறைந்த உழைப்பு-அதிகப்பயன் Minimum Labour Maximum Benefit பெற்றுவருகிறோம், நாம். இது, சாதாரணமானதல்ல.

எனவே, விஞ்ஞானத்தால் நாம் பெறும் லாபமும் வசதியும் அதிகம். இந்த நேரத்தில் நீங்கள் ஒன்று உணர வேண்டும், விஞ்ஞானிகள் எவரும் சுயநலக்காரர்களல்ல, தான் கண்டுபிடித்த உண்மைகளை உலகம் பூராவுக்கும், அவர்கள் பொதுவாக்கிவிட்டே போயிருக்கிறார்கள். அவர்களின் தியாகத்துக்கும் நம்முடைய நிலைமைக்கும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

தலைவலிக்குத் 'தைலம்' தருவான், நமது நாட்டுப்புற வைத்யன். 'என்ன தைலம்? இதை எப்படிச் செய்தீர்கள்?' என்று கேட்டுப் பாருங்கள்—விபரம எதையும் சொல்லமாட்டான் உங்களுக்கு.

அதேபோல, ஒரு பச்சிலையைப் பறித்துவந்து தருவான். 'இதன் பெயர் என்ன?'—கேளுங்கள்! சொல்ல மாட்டான். 'பச்சிலையின் பெயரைச் சொன்னால் பலிக்காது—வியாதி போகாது' என்று விவரிப்பான்.

மேல்நாட்டு விஞ்ஞானிகள் இப்படிப்பட்டவர்களா?

இதோ இருக்கும் ஒலிபெருக்கி ஒன்றே ஒன்று மட்டும் தயார்செய்யப்பட்டு அது நமது நாட்டுச் சுயநலக்காரன் ஒருவனிடம் சிக்கியிருந்தால்!

இது என்ன தெரியுமா? இது தான் சிவபெருமான் அருள்' என்பான், 'இந்தா, இந்த விபூதியை இட்டுக்கொள்' என்றழைப்பான், கைலாயத்திலிருந்து பேசச் செய்கிறேன், என்பான். 'கேட்கிறதா சப்தம்?'—அவன் கேட்பான். 'சப்தம் கேட்கவில்லையா, நீ பாபி!' என்பான். இப்படியெல்லாம், மக்களை ஏமாற்றி, அந்த எத்தன், எவ்வளவு கோடி சம்பாதித்திருப்பான் இதற்குள்?

இப்படிப்பட்டவர்களா, விஞ்ஞானிகள். இல்லையே! தான் கண்டதை உலகுக்கே அல்லவா தந்திருக்கிறார்கள்.

விஞ்ஞானத்தாலே, செல்வம் கொழிக்கவும், அவன் கண்டுபிடித்ததைப் பலர் காசாக்கவும் செய்தான் விஞ்ஞானி. ஆனால் அவன்

(5-ம் பக்கம் பார்க்க)

சேலம் மாநாடு

வரவேற்புக் குழு

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டை மே திங்கள் 5, 6 சனி, ஞாயிறு கிழமைகளில் சேலத்தில் நடத்துவது என்று 29—3—51-ம் நாள் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

செயற் குழுக் கூட்டம் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயற் குழுவையே மாநாட்டின் வரவேற்புக் குழுவாக மாற்றுவதெனத் தீர்மானம் செய்யப்பட்டு, கீழ்க் கண்டவர்கள் அடங்கிய வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

வரவேற்புத்தலைவர்:- ஜி. பி. சோமசுந்தரம், செயலாளர்:- சேலம் ஏ. சித்தையன், துணைச்செயலாளர்கள்:- கே. பெருமாள், என். கே. பி. வேலு, பொருளாளர்:- ஆர். நாராயணசாமி, விளம்பர உறுப்பினர்:- ப. கண்ணன்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.